# வாய்ப்பைப் பயன்படுத்தி வளம் பெறுவோம்!


க. பழனித்துரை

**கிராம பஞ்சாயத்துகள், உயர்கல்வி நிறுவனங்களை அணுக வேண்டும். உயர்கல்வி நிறுவனங்கள் 'உன்னத் பாரத் அபியான்' திட்டத்தின் மூலம் பஞ்சாயத்துகளுக்கு உதவிட வேண்டும். மாநில அரசு இந்தச் செயல்பாட்டை ஊக்குவிக்க முன்வர வேண்டும்.**

கட்டுரையாளர்:
பேராசிரியர்.

# காத்திருக்கும் பேராபத்து!

தில்லி, மும்பை உள்ளிட்ட பல இந்திய நகரங்களில் காற்றின் தரம் குறைந்து மக்கள் மூச்சுவிடக்கூட திணறும் சூழல் ஏற்பட்டிருக்கிறது. அறுவடைக்குப் பிறகு வயல்களில் தீ வைப்பதைத் தடுக்குமாறு பஞ்சாப், ஹரியாணா, உத்தர பிரதேசம், ராஜஸ்தான் மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. உச்சநீதிமன்ற நீதிபதி சஞ்சய் கிஷன் கௌல் தலைமையிலான அமர்வு மக்களின் சுகாதாரத்தை படுகொலை செய்யும் நடவடிக்கை என்று அதைக் கண்டித்திருக்கிறது.

நீதிபதிகள் ஏ.எஸ். போபண்ணா, எம்.எம். சுந்தரேஷ் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு, ஒட்டுமொத்த இந்தியாவிலும் பேரியம் சார்ந்த பட்டாசுகள் வெடிப்பதற்கு தடை விதித்திருக்கிறது. காற்று மாசு காரணமாக புகை மண்டலம் போல சுற்றுச்சூழல் மாறியிருக்கும் நிலையில் அதை எதிர்கொள்ள முடியாமல் மாநில அரசுகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

காற்றின் தரம் குறைந்திருப்பது மட்டுமே அச்சுறுத்தல் அல்ல. அதைவிடப் பெரிய அச்சுறுத்தலாக புவி வெப்பமயமாதல் ஒட்டுமொத்த மனித இனத்தையே கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. உலகில் உள்ள எந்தவொரு நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. மிக அதிகமாக எல் – நினோவாலும் புவி வெப்பமயமாதலாலும் பாதிக்கப்பட்டிருப்பது ஐரோப்பா என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த ஆண்டு ஐரோப்பாவின் பல மலைகளில் காட்டுத் தீ பரவி ஆயிரக்கணக்கான மரங்கள் சாம்பலாகி இருக்கின்றன. முந்தைய பதிவுகளைக் கடந்து வெப்பம் அதிகரிப்பதால் ஐரோப்பாவில் ஒரு நகரமே அழிந்திருக்கிறது. 75 நாடுகளில் வழக்கமான வெப்பநிலை, இரண்டு டிகிரி செல்ஷியஸுக்கும் அதிகமாக அதிகரித்ததால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு சாதாரணமானதல்ல.

பூமத்திய ரேகையையொட்டிய பசிபிக் மகா சமுத்திரத்தின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் எல்–நினோவின் தாக்கம் ஒரு முக்கியமான காரணம். இந்த ஆண்டு காணப்படும் அதிகரித்த வெப்பநிலைக்கு எல்–நினோவின் தாக்கமும் முக்கியமான காரணம். இந்த ஆண்டைவிட அடுத்த ஆண்டு வெப்பநிலை மேலும் அதிகரிக்கும் என்று தெரிவிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

கடந்த ஏழு மாதங்களின் கடல் நீர்மட்ட வெப்பமும், ஐந்து மாதங்களின் நிலப்பகுதிகளின் வெப்பமும் இதுவரை இல்லாத அளவுக்குப் பதிவாகி இருக்கின்றன. 1982 முதல் 2011 வரையிலான வெப்பநிலை சராசரியைவிட கணிசமான அளவில் கடல் மட்ட வெப்பநிலை அக்டோபர் மாதம் கூடுதலாகக் காணப்பட்டது. ஏப்ரலில் தொடங்கிய வெப்ப அதிகரிப்பு எல்–நினோவின் தாக்கம் அதிகரிக்க அதிகரிக்க மேலும் உயர்ந்தது. போதாக்குறைக்கு புவி வெப்பமயமாதலும் சேர்ந்து கொண்டது.

கடந்த 174 ஆண்டு உலக பருவநிலை பதிவில் இந்த ஆண்டுதான் (2023) மிக அதிகமான வெப்பத்தை சந்தித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 1981 முதல் பதிவாகி இருக்கும் உலக சராசரி வெப்பத்தைவிட இந்த ஆண்டு வெப்பம் அதிகமாகக் காணப்படுகிறது.

வழக்கமாக புவி வெப்பமடையும்போது 93 % வெப்பத்தை கடல் நீர் உள்வாங்குகிறது. அது ஆவியாகி மழை பொழியும்போது பூமி குளிர்கிறது. எல்–நினோ காரணமாக கடலின் மேல்மட்ட நீர் ஏற்கெனவே வெப்பமாகிவிடுவதால் இந்த சுழற்சி பாதிக்கப்படுகிறது. அதனால்தான் இந்து மகா சமுத்திரம் போன்ற பகுதிகளில் வெப்ப அலைகள் தோன்றி, அந்தப் பகுதியில் உள்ள நாடுகளின் பருவநிலையை பாதிக்கின்றன.

இதைவிடக் கவலையளிப்பது, அடுத்த மூன்று மாதங்கள் – அதாவது நவம்பர், டிசம்பர், ஜனவரியில் – எல்–நினோவின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என்கிற கணிப்பு. அந்த நிலை தொடர்ந்தால் வெப்பம் அதிகரிப்பது மட்டுமல்லாமல், கடல்வாழ் உயிரினங்கள் பெரிய அளவில் பாதிக்கப்படக் கூடும். அவற்றின் இனப்பெருக்கம் தடைபட்டு கடல்வளம் குறையும்.

ஐரோப்பாவுக்கு அடுத்தபடியாக 2023–இல் காணப்படும் அதிகரித்த வெப்பத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. வழக்கத்துக்கு மாறாக பிப்ரவரியிலும், ஆகஸ்டிலும் வெப்பமும், எப்போதும் இல்லாத அளவில் பருவமழைப் பொழிவும் இந்த ஆண்டு காணப்பட்டது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பகுதியில் பருவமழை சீராகப் பொழியாமல் இருந்ததையும் குறிப்பிட வேண்டும். கடந்த அக்டோபர் மாதம், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக அதிக வெப்பம் காணப்பட்ட மாதம் என்றும் பதிவாகி இருக்கிறது.

தொழிற்புரட்சி காலத்தைவிட 1.5 டிகிரி – 2 டிகிரி செண்டிகிரேட் அதிகரித்த வெப்பநிலையைக் குறைப்பதற்கான எந்த முயற்சிகளும் இதுவரை வெற்றிபெறவில்லை. 2 டிகிரி செண்டிகிரேட் அளவில் புவி வெப்பமயம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டாலும் கூட, இந்தியாவில் வெப்ப அலைகள் எட்டு மடங்கு அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள்.

மிக அதிகமாக பாதிக்கப்பட இருப்பவை இந்தியாவின் நகரங்கள். சராசரி வெப்பம் 41 டிகிரி செண்டிகிரேடில் இருந்து 46 டிகிரி செண்டிகிரேடாக அதிகரித்தால் பலருடைய மரணத்துக்கும் அது காரணமாகக்கூடும். கடந்த ஏப்ரல் மாதம் ஐரோப்பாவில் வெப்ப அலை காரணமாக 15,700 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் எனும்போது, அதுபோன்ற சூழல் இந்தியாவிலும் ஏற்படாது என்று கூறுவதற்கில்லை.

வறட்சியும், பஞ்சமும் லட்சக்கணக்கானோரின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்திருக்கின்றன. 1876 – 1878, 1899 – 1900 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சியும், பஞ்சமும் ஒரு கோடிக்கும் மேற்பட்டோரின் மரணத்துக்கு காரணம் என்று வரலாறு பதிவு செய்கிறது. அதனால், அதிகரித்துக் கொண்டிருக்கும் வெப்பத்தை எதிர்கொள்ள இப்போதே நாம் தயாராக வேண்டும்!

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புலிவால் பிடித்த கதை...

**ம. விசுவநாதன்**

மகாராஷ்டிரத்தில் முன்னேறிய வகுப்பினராகக் கருதப்படும் மராத்தா சமூகத்தினர் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள தங்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கக் கோரி நடத்திவரும் போராட்டம் மீண்டும் சூடுபிடித்திருக்கிறது.

அந்த மாநிலத்தின் மக்கள்தொகையில் சுமார் 32 சதவீதம் உள்ள மராத்தா சமூகத்தினர் கல்வியிலும், அரசு வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு கோரி கடந்த 1981-ஆம் ஆண்டு முதல் போராடி வருகின்றனர். இவர்களுக்கு மாநிலத்தின் பிரதான கட்சிகளான பாஜக, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சிவசேனை (உத்தவ் தாக்கரே பிரிவு), சிவசேனை (ஏக்நாத் ஷிண்டே பிரிவு) ஆகியவை ஆதரவு தெரிவித்து வருகின்றன.

மராத்தா இட ஒதுக்கீடு தொடர்பாக மாநில அரசால் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம் (2014), இயற்றப்பட்ட சட்டங்கள் (2014, 2018) மும்பை உயர்நீதிமன்றத்தாலும், உச்சநீதிமன்றத்தாலும் (2014, 2021) ரத்து செய்யப்பட்டன. இது தொடர்பான சீராய்வு மனு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

மகாராஷ்டிரத்தில் மும்பை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களும், கரும்பு அதிகம் விளைவதால் மேற்கு மாவட்டங்களும் ஓரளவு செழிப்பாக உள்ளன. இவற்றுடன் ஒப்பிடும்போது மராத்வாடா பிராந்தியம் சற்று பின்தங்கியே உள்ளது. உதாரணத்துக்கு 2021-22-இல் மேற்கு மாவட்டங்களின் சராசரி மொத்த உற்பத்தி ரூ.18.8 லட்சம் கோடி என்றால், மராத்வாடா பிராந்திய மாவட்டங்களின் சராசரி மொத்த உற்பத்தி ரூ.3.5 லட்சம் கோடி மட்டுமே ஆகும்.

மராத்வாடா பிராந்தியத்தில் அதிகமாக வசிக்கும் மராத்தா சமூகத்தினருக்கு இட ஒதுக்கீடு கோரி மனோஜ் ஜரங்கே பாட்டீல் என்பவர் ஜால்னா மாவட்டத்தில் உள்ள தனது சொந்த கிராமமான அந்தர்வாலி சராடியில் கடந்த ஆகஸ்ட் 29-ஆம் தேதி காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

மராத்வாடாவில் உள்ள மராத்தாக்களுக்கு குன்பி சமூக சான்றிதழ் வழங்குவது தொடர்பாக முன்னாள் தலைமை நீதிபதி சந்தீப் ஷிண்டே தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைத்து ஒரு மாதத்துக்குள் தீர்வு காணப்படும் என முதல்வர் ஏக்நாத் ஷிண்டே அறிவித்ததையடுத்து மனோஜ் ஜரங்கே பாட்டீல் உண்ணாவிரதத்தை செப்டம்பர் 14-ஆம் தேதி முடித்துக் கொண்டார்.

ஆனால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் அவர் அக்டோபர் 25-ஆம் தேதி உண்ணாவிரதத்தை மீண்டும் தொடங்கினார். இந்த கொதிப்பான சூழலில், மனோஜ் ஜரங்கேயை விமர்சித்து தேசியவாத காங்கிரஸ் எம்எல்ஏ பிரகாஷ் சோலங்கி பேசியதாகக் கூறப்படும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியானது.

இதையடுத்து பீட் மாவட்டத்தில் கடந்த அக்டோபர் 30-ஆம் தேதி வன்முறை வெடித்தது. சோலங்கி வீட்டுக்குப் போராட்டக்காரர்கள் தீவைத்தனர். தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மற்றொரு எம்எல்ஏ சந்தீப் க்ஷீர்சாகரின் வீடு, அலுவலகம், முன்னாள் மாநில அமைச்சர் ஜெய்தத் க்ஷீர்சாகரின் வீடு, நகராட்சிக் கட்டடம் ஆகியவற்றுக்கும் தீ வைத்தனர்.

போராட்டம் வன்முறையாக மாறியதை அடுத்து, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே கூட்டினார். அதில், தற்போது இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஒதுக்கீட்டை மராத்தா சமூகத்தினரும் பெறும் வகையில் அந்த வகுப்பில் இடம்பெற்றுள்ள குன்பி சமூக ஜாதி சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், உச்சநீதிமன்றத்தில் மீண்டும் சீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என்றும் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே அறிவித்தார்.

இதையடுத்து, உண்ணாவிரதப் போராட்டத்தை நவம்பர் 2-ஆம் தேதி வாபஸ் பெற்ற மனோஜ் ஜரங்கே, கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் போராட்டம் நடத்துவேன் என்று கூறியிருக்கிறார்.

மாநில, மத்திய பட்டியல்களில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவில் இடம்பெற்றுள்ள குன்பி சமூகத்தினர் கல்வி, அரசு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு பெற்றுள்ளனர். தங்கள் முன்னோர்கள் குன்பி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆவணங்களை வைத்திருக்கும் மராத்தாக்களுக்கு குன்பி ஜாதி சான்றிதழ் வழங்க வேண்டும் என மனோஜ் ஜரங்கே வலியுறுத்தி உள்ளார்.

நிஜாம் ஆட்சிக் காலத்தில் ஹைதராபாத் மாகாணத்தின் ஒரு பகுதியாக மராத்வாடா பிராந்தியம் இருந்தபோது மராத்தாக்கள் குன்பி சமூகத்தினராக வகைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த ஜாதி சான்றிதழுக்கான நிஜாம் கால ஆவணங்களை தெலங்கானா அரசிடம் கேட்டுப் பெற வேண்டியுள்ளது. அங்கு நவம்பர் 30-ஆம் தேதி பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளதால் இப்போதைக்கு இந்த ஆவணங்களைப் பெறுவது சாத்தியமில்லை.

ஒருவேளை ஆவணங்கள் கிடைத்து, மராத்தாக்களுக்கு குன்பி ஜாதி சான்றிதழ் வழங்கப்பட்டாலும் அதை இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் ஏற்கப் போவதில்லை. இப்போது கிடைத்து வரும் இட ஒதுக்கீட்டில் அவர்களது பங்கு குறைந்துவிடும் என்பதால் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுபோல நாடு முழுவதும் பல்வேறு சமூகத்தினரும் இட ஒதுக்கீடு கேட்டு போராட்டங்களை அவ்வப்போது முன்னெடுக்கின்றனர். அரசியல் கட்சியினரும் அந்த சமூகத்தினரின் வாக்குகளைப் பெறுவதற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர்.

இட ஒதுக்கீடு 50 சதவீதத்தைத் தாண்டக்கூடாது என்ற உச்சநீதிமன்ற நிபந்தனையால் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர். பல ஆண்டுகள் போராடும் மக்கள் பொறுமை இழந்தால் வன்முறையாக மாறும் என்பது கட்சிகளுக்குத் தெரியாததல்ல.

இதற்கு முன் இல்லாத வகையில், பிகாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி புள்ளிவிவரங்கள் அறிவிக்கப்பட்டதையடுத்து, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நாடு முழுவதும் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அதனால், பெரும்பாலான கட்சிகள் தங்கள் மாநிலத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

ஜாதிவாரி கணக்கெடுப்பு என்பது முள் மீது கிடக்கும் துணி போன்றது. சரியாக கையாளவில்லை என்றால் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசியல் கட்சிகள் உணர வேண்டும்.

# தமிழ்ப் பற்றாளர்கள் 38 பேருக்கு விருது

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்



சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ் அகராதியியல் நாள் விழாவில் விருதுகளைப் பெற்ற 38 தமிழ்ப் பற்றாளர்களுடன் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலர் இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர் கோ.விசயராகவன்.

**சென்னை, நவ. 8:** தமிழ்ப் பற்றாளர்கள் 38 பேருக்கு விருதுகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சி, சென்னை கலைவாணர் அரங்கத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில், கடந்த ஆண்டுக்கான தூயதமிழ்ப் பற்றாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

த.தினேஷ் (அரியலூர்), வா.பரணிப்பாவலன் (செங்கல்பட்டு), மெய்ஞானி பிரபாகரபாபு (சென்னை), ச. கருத்தாளன் (எ) காளிதாசன் (கடலூர்), கோ. வெங்கடாசலம் (எ) பாவலர்கோ. மலர்வண்ணன் (தருமபுரி), மோ. நாகஅர்ஜுன் (திண்டுக்கல்),

பெ. தனலட்சுமி (ஈரோடு), ச.வாசுதேவன் (எ) நடுநாட்டுத் தமிழன் (கள்ளக்குறிச்சி), விண்மீன்(எ) சி. ஏமலதா (காஞ்சிபுரம்), அகநம்பி (தமிழ்நம்பி) தி. பாலசுப்பிரமணியன் (கன்னியாகுமரி), வே. குழந்தைசாமி (கோயம்புத்தூர்), மு. சந்தோசகுமார் (கிருஷ்ணகிரி),

சித்தார்த்பாண்டியன் (எ) பெ. தங்கப்பாண்டி (மதுரை), இரா.அகிலா (நாகப்பட்டினம்), அ.செந்தில்குமார் (எ) தமிழ்க்குமரன் (பெரம்பலூர்), மெ. சிவநந்தினி (புதுக்கோட்டை), சு. சோலைராசா (ராமநாதபுரம்), அ. மீனா (ராணிப்பேட்டை), தமிழ்ப்பரிதிமாரி (சேலம்), கோ. ஆனந்தா (சிவகங்கை), பா. கோவிந்தராசன் (தஞ்சாவூர்),

மு. சுப்பிரமணி (தேனி), இ. செல்வகவிதா (தென்காசி), ச.சரவணன் (திருப்பத்தூர்), பு. கீர்த்தனா (திருப்பூர்),

சி. இராமச்சந்திரன் (திருவள்ளூர்), கீர்த்தனா (திருவண்ணாமலை), தி. தினேஷ்பாபு (திருவாரூர்), வ. செல்வமாரிமுத்து (திருநெல்வேலி), நாவை. சிவம் (எ) து.வை. சிவராமலிங்கம் (திருச்சி), செ.அந்தோணிராகுல் கோல்டன் (தூத்துக்குடி), இரா. கண்ணன் (நாமக்கல்), ம.ச. சந்தீப் (வேலூர்), பெ.கனியன் (விழுப்புரம்), பி.நிலா (விருதுநகர்) ஆகியோருக்கு தூய தமிழ்ப் பற்றாளர் விருதை, அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.

தூயதமிழ் ஊடக விருது மா. பூங்குன்றனுக்கும், நற்றமிழ்ப் பாவலர் விருது ம.சுடர்த்தமிழ்ச் சோழனுக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலர் இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் கோ.விசயராகவன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

73 ஆண்டுகள் வழக்குரைஞர் பணி

# கின்னஸ் சாதனை படைத்த 97 வயது முதியவர்




**திருவனந்தபுரம், நவ.8:** கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பி. பாலசுப்ரமணியன் மேனன் (97) என்பவர் 73 ஆண்டுகளாக வழக்குரைஞராக பணியாற்றி வருகிறார்.

இதையடுத்து நீண்ட நாள்களாக வழக்குரைஞராக பணியாற்றி வரும் நபர் என்ற பெருமையை பெற்று கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

இதுகுறித்து கின்னஸ் உலக சாதனை புத்தக அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்;'கேரளத்தைச் சேர்ந்த பி. பாலசுப்ரமணியன் மேனன் 73 ஆண்டுகள் 60 நாள்கள் வழக்குரைஞராக பணியாற்றி வருவதன் மூலம் நீண்ட நாள்களாக வழக்குரைஞராக பணியாற்றும் நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கின்னஸ் சாதனை படைத்தது குறித்து தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு பாலசுப்ரமணியன் அளித்த பேட்டியில்;'என்னிடம் வழக்குகளை ஒப்படைக்கும் நபர்கள் என்மீது மிகுந்த நம்பிக்கை கொள்கின்றனர். அவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்வேன். என்னுடைய உடல்நலன் ஒத்துழைக்கின்ற வரையில் என் பணியை தொடர்ந்து மேற்கொள்வேன்' என்றார்.

மெட்ராஸ் சட்டக் கல்லூரியில் தனது பட்டப்படிப்பை முடித்து 1950-ஆம் ஆண்டு முதல் பாலசுப்ரமணியன் வழக்குரைஞராக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கியூ.எஸ். உலக பல்கலைக்கழக தரவரிசை: சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முன்னிலை

**புது தில்லி, நவ.8:** பிரபல கியூ.எஸ். உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியலில் சீனாவை பின்னக்குத் தள்ளி அதிகமான உயர்கல்வி நிறுவனங்களுடன் இந்திய முதன் முறையாக முன்னிலை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டைக் காட்டிலும் கூடுதலாக 37 உயர் கல்வி நிறுவனங்களுடன் மொத்தம் 148 இந்திய உயர் கல்வி நிறுவனங்கள் தரவரிசைப் பட்டியலில் இடம்பிடித்துள்ளன.

இந்தியாவுக்கு அடுத்து 133 உயர்கல்வி நிறுவனங்களுடன் சீனாவும், 96 உயர்கல்வி நிறுவனங்களுடன் ஜப்பானும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

மியான்மர், கம்போடியா மற்றும் நேபாள நாடுகளின் உயர் கல்வி நிறுவனங்கள் முதன்முறையாக இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளன.

பிரிட்டனைச் சேர்ந்த 'குவாகுவரெல்லி சைமண்ட்ஸ் (கியூ.எஸ்.)' தரவரிசை நிறுவனம், உயர்கல்வி நிறுவன பேராசிரியர்களின் ஆய்விதழ் சமர்ப்பிப்பு, கல்வி நிறுவனத்தின் கல்வி முறை மற்றும் ஊழியர்களுக்கான மதிப்பு, ஆசிரியர் - மாணவர் விகிதாச்சாரம் ஆகிய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உலக அளவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்து ஒவ்வொரு ஆண்டும் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில், 2024-ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை அந்த நிறுவனம் புதன்கிழமை வெளியிட்டது. அதில் இந்தியாவின் 148 உயர்கல்வி நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன. அவற்றில் மும்பை ஐஐடி முன்னிலை பெற்றுள்ளது. பெங்களூரு இந்திய அறிவியல் கழகம் (ஐஐஎஸ்சி), ஐஐடி சென்னை, ஐஐடி தில்லி, ஐஐடி கான்பூர், ஐஐடி காரக்பூர், தில்லி பல்கலைக் கழகம் ஆகியவை ஆசிய அளவில் முதல் 100 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளன.

இதுகுறித்து கியூ.எஸ். நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியாவில் ஆராய்ச்சி (பிஎச்.டி.) தகுதியுடன் கூடிய பேராசிரியர்கள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது. வலுவான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளிலும் இந்தியா நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இந்திய உயர் கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சித் திறன் மேலும் சர்வதேச தரத்துக்கு உயர்வதற்கான சாத்தியக்கூறுகளும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

குறிப்பாக சர்வதேச ஆராய்ச்சி தொடர்பு குறியீட்டில் இந்தியா 15.4 புள்ளிகளையும், பிராந்திய அளவில் 18.8 புள்ளிகளையும் இந்தியா பெற்றுள்ளது. அதுபோல, அமெரிக்காவில் உயர்கல்வி மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவில் சீனாவை விஞ்சி இந்தியா முன்னிலை பெற்றுள்ளது' என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கியூ.எஸ். நிறுவன துணைத் தலைவர் பென் சோடெர் கூறுகையில், 'தரவரிசைப் பட்டியலில் இந்திய உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பது, உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்த இந்தியா மேற்கொண்டுவரும் முயற்சியையும், ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் இந்திய கல்வி நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றிவருவதையும் பிரதிபலிக்கிறது' என்றார்.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் அதிகரிப்பு

## இளைஞர்களுக்கு பிரதமர் மோடி பாராட்டு



**புது தில்லி நவ.8:** இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் அதிகரித்திருப்பதற்கு இளைஞர்களின் புதுமையான கண்டுபிடிப்புகளே காரணம் என பிரதமர் மோடி நாட்டு இளைஞர்களுக்கு பாராட்டுகள் தெரிவித்துள்ளார்.

உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் ஆண்டறிக்கை புதன்கிழமை வெளியிடப்பட்டது.

அதில், 'கடந்த 2022-ஆம் ஆண்டில் காப்புரிமை பதிவில் சீனா, அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா, ஜெர்மனி ஆகிய நாடுகள் முதல் 10 இடங்களில் உள்ளன. உலக காப்புரிமை விண்ணப்பங்களில் 50 சதவீதத்தை சீனாவே பதிவு செய்கிறது. இருப்பினும் முந்தைய ஆண்டில் 6.8 சதவீதம், கடந்த ஆண்டில் 3.1 சதவீதம் என சீனாவின் வளர்ச்சி விகிதம் சரிவைச் சந்தித்து வருகிறது.

இந்தியாவிலிருந்து காப்புரிமை விண்ணப்பங்களைப் பதிவு செய்வோரின் எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டில் 31.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடந்த 11 ஆண்டுகளாக அதிகளவிலான காப்புரிமை விண்ணப்பங்களை இந்தியா பதிவு செய்து வருகிறது. காப்புரிமை பதிவில் முதல் 10 இடங்களில் உள்ள நாடுகளின் வளர்ச்சி விகிதத்தைவிட இந்தியாவின் வளர்ச்சி விகிதம் அதிகமானது' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையைச் சுட்டிக் காட்டி பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில், 'புதுமையான கண்டுபிடிப்புகளை இளைஞர்கள் அதிக அளவில் பதிவு செய்வதால், இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இது நாட்டின் சிறப்பான எதிர்காலத்தைக் காட்டுகிறது' என பதிவிட்டார்.

# கடந்த ஆண்டு 75 லட்சம் பேருக்கு காசநோய்

## உலக சுகாதார அமைப்பு

**புது தில்லி, நவ.8:** உலக அளவில் இதுவரை இல்லாத அளவில் கடந்த ஆண்டு 75 லட்சம் பேருக்கு காசநோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அதே நேரம், 2022-இல் காசநோய் பாதிப்பு கண்டறிதலும், பாதிப்புக்கு சிகிச்சை அளித்தலும் உலக அளவில் மேம்பட்டிருப்பதையும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

உலக அளவில் 192 நாடுகளில் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், நிகழாண்டுக்கான உலகளாவிய காசநோய் பாதிப்பு அறிக்கையை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது: உலக அளவில் 2022-ஆம் ஆண்டில் 75 லட்சம் பேருக்கு காசநோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது கடந்த 1995-ஆம் ஆண்டு முதல் கண்டறியப்பட்ட நோய் பாதிப்புடையவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாகும்.

அதாவது, உலக அளவில் நோய் பாதிப்பு கண்டறிதல் விகிதம் அதிகரித்திருப்பதையே இது காட்டுகிறது. இது பல நாடுகளில் சுகாதார சேவைகள் அணுகுதலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் அமையும்.

புவியியல் ரீதியில் 2022-ஆம் ஆண்டில் காச நோயால் அதிக நபர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளாக தென்கிழக்கு ஆசியா (46%), ஆப்பிரிக்கா (23%), மேற்கு பசிஃபிக் பிராந்தியம் (18%) ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. குறைந்த பாதிப்பு பதிவான பகுதிகளாக கிழக்கு மத்திய தரைக் கடல் பகுதி (8.1%), அமெரிக்கா (3.1%), ஐரோப்பா (2.2%) ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.

மேலும், புதிதாக காசநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைப்பதில் 2020, 2021-ஆம் ஆண்டுகளில் இந்தியா, இந்தோனேசியா, பிலிப்பின்ஸ் நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. நோய் பாதிப்பு குறைப்பு விகிதத்தில் இந்த நாடுகள் உலக அளவில் 60 சதவீதப் பங்கை வகிக்கின்றன.

காசநோய் தொடர்பான உயிரிழப்புகளைப் பொருத்தவரை (ஹெச்ஐவி பாதிக்கப்பட்டவர்கள் உள்பட) கடந்த 2021-ஆம் ஆண்டு உலக அளவில் 1.4 கோடியாக இருந்த உயிரிழப்புகளின் எண்ணிக்கை, 2022-இல் 13 லட்சமாக குறைந்துள்ளது.

இருந்தபோதும், 2020 முதல் 2022-ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், கரோனா பாதிப்பின் தாக்கம் காசநோய் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை 5 லட்சம் அளவில் கூடுதலாக்கியுள்ளது.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியேசஸ் வெளியிட்ட அறிக்கையில், 'நமது மூதாதையர்கள் காசநோய் பாதிப்பு மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான புரிதல் இல்லாததால், உயிரிழப்பைச் சந்தித்து வந்தனர்.

இன்றைக்கு இந்த நோய் பாதிப்பைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. அதன்மூலம், இந்த பாதிப்புக்கு இறுதி அத்தியாயத்தை எழுதும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

# தேசிய ஜூனியர் தடகளம்: தமிழக வீரர் ஜிதின் சாதனை

**கோவை, நவ. 8:** கோவையில் நடைபெறும் 38-ஆவது தேசிய ஜூனியர் தடகள போட்டியில், நீளம் தாண்டுதல் பிரிவில் தமிழக வீரர் ஜிதின் தேசிய சாதனை படைத்தார்.



தமிழ்நாடு தடகள சங்கத்தின் சார்பில் கோவை நேரு விளையாட்டு மைதானத்தில் தேசிய தடகள போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் புதன்கிழமை நடைபெற்ற 16 வயதுக்கு உள்பட்டோருக்கான ஆடவர் நீளம் தாண்டுதலில் தமிழக வீரர் ஆர்.ஜிதின் 7.35 மீட்டர் தாண்டி தேசிய சாதனை படைத்தார். இதற்கு முன், 2018-இல் பங்கஜ் வர்மா 7.27 மீட்டர் நீளம் தாண்டியதே சாதனையாக இருக்க, அதை தற்போது ஜிதின் முறியடித்தார்.

இந்த போட்டியில் உத்தர பிரதேசத்தின் அனுராக் 2-ஆம் இடத்தையும் (6.85 மீட்டர்), தமிழகத்தின் ஜெயபிரணேவ்ஷ் 3-ஆம் இடத்தையும் (6.63 மீட்டர்) பிடித்தனர்.

100 மீட்டர் ஓட்டத்தில் 20 வயதுக்குள்பட்ட மகளிர் பிரிவில் ஹரியாணாவின் பாவ்னா முதலிடம் பிடித்தார். பந்தய தூரத்தை அவர் 11.55 விநாடிகளில் கடந்தார்.

கேரளத்தின் வி.நேகா 2-ஆம் இடத்தையும் (11.78 விநாடிகள்), குஜராத்தின் சாக்ஷி சாவன் 3-ஆம் இடத்தையும் (11.87 விநாடிகள்) பிடித்தனர். 18 வயதுக்குள்பட்ட மகளிருக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் தமிழகத்தின் அபிநயா ராஜராஜன் முதலிடம் பிடித்தார். அவர் 11.91 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்தார். இப்போட்டிகள் வரும் 10-ஆம் தேதி வரை நடைபெறுகின்றன.

EVA STALIN IAS ACADEMY

# ஆசிய வில்வித்தை: இந்தியாவுக்கு இரு வெண்கலம்




**பாங்காக், நவ. 8:** தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு புதன்கிழமை 2 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்தன.

காம்பவுண்ட் ஆடவர் அணிகள் பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்கான சுற்றில் இந்தியாவின் அபிஷேக் வர்மா, பிரதமேஷ் ஃபுகே, பிரியன்ஷ் ஆகியோர் கூட்டணி வெற்றி பெற்றது. முன்னதாக சீன தைபே அணியுடனான இவர்கள் மோதல் முதலில் 235 -235 என சமன் ஆக, பின்னர் நடைபெற்ற ஷூட் ஆஃபில் இந்தியா 29-28 என வென்று பதக்கத்தை கைப்பற்றியது.

ரீகர்வ் மகளிர் அணிகள் பிரிவில் அங்கிதா பகத், பஜன் கௌர், திஷா புனியா ஆகியோர் அடங்கிய இந்திய அணி 5-1 என்ற கணக்கில் தைவானை சாய்த்து வெண்கலப் பதக்கத்தை தனதாக்கியது.

இதனிடையே, காம்பவுண்ட் மகளிர் தனிநபர் அரையிறுதியில் இந்தியாவின் ஜோதி சுரேகா 148 -145 என சீன தைபேவின் ஹுவாங் ஐ ஜுவையும், பர்னீத் கௌர் 147 - 145 என கஜகஸ்தானின் விக்டோரியா லியானையும் சாய்த்தனர். இதையடுத்து இந்தியர்கள் இருவரும் இறுதிச்சுற்றில் பரஸ்பரம் மோதுவதால், இந்தியாவுக்கு தங்கம், வெள்ளி உறுதியானது.

மகளிர் அணிகள் பிரிவில் அதிதி சுவாமி, ஜோதி சுரேகா, பர்னீத் கௌர் கூட்டணி தனது அரையிறுதியில் 228 - 217 என்ற கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது. அதில் சீன தைபேவை சந்திக்கிறது. அதேபோல் கலப்பு அணிகள் பிரிவிலும் அதிதி/பிரியன்ஷ் கூட்டணி 157 - 155 என கஜகஸ்தான் ஜோடியை சாய்த்து இறுதிக்கு வந்து, அதில் தாய்லாந்துடன் மோதுகிறது. காம்பவுண்ட் ஆடவர் தனிநபர் பிரிவில் வெண்கலப் பதக்கச் சுற்றுக்கு வந்திருக்கிறார் அபிஷேக் வர்மா.

EVA STALIN IAS ACADEMY